ரெஜிஸ்டர் நெ. M. 3855.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7. அக்டோபர், 1944 நெ. 7

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயணா.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விப்பன்னா, பி.ஏ., பி.எல்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—

கிராம நன்மை வேலைக்கு பயிற்சி ... 147

கவர்மெண்டு பொது சுகாதார இலாக அறிக்கை ... 149

2. காலரா வந்திருக்கிறது எனத் தெரிந்தால் கீழ்க்கண்ட முன் எச்சரிக்கைகளை அனுசரிக்கவேண்டியது ... 150

3. திட்டம், நிர்மாண வேலை இலாகா சாதிக்கப்போவதைப் பற்றி சர் ட்லால் பிரசங்கம் ... 151

4. சர்க்கார் பழவர்க்கப் பண்ணைகளின் நோக்கம் ... 153

5. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 156

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 7 | அக்டோபர், 1944 | No. 7

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்த எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

தலையங்கம்.

கிராம நன்மை வேலைக்கு பயிற்சி.

சில மனிதர்களுக்கு கிராம நன்மை வேலைகள் செய்ய பயிற்சி யளிக்க ஒரு திட்டத்தை சென்னை கவர்மெண்டார் அனுமதித்திருக்கிறார்கள். இது முக்கியமாக கிராம தலைமை யதிகாரிக்கு பயிற்சி யளிக்க நோக்கம் கொண்டது. ஆனால் அவர்களில் முனிசிபல் எல்லைக்குள் வேலை செய்பவர்கள், மிகவும் வயதானவர்கள் அல்லது கலெக்டர் மற்ற எந்த காரணத்தினாலாவது லாயக்கற்றவர்கள் என கருதப்படுபவர்கள் இதிலிருந்து விலக்கப்படுவார்கள். அவர்களுடன் கூட நிர்வாக உத்தியோகஸ்தர் நியமிக்கப்படாததும் 3,000த்திலிருந்து 5,000க்குள் வருமானமுடையதுமான பஞ்சாயத்து போர்டுகளின் தலைவர்களும் அவர்கள் சம்மதப்பட்டால், பயிற்சியளிக்கப்படுவார்கள். இப்பயிற்சி ஜில்லா தலைமை பட்டணத்தில் ஒரு மாத காலம் நடைபெறும். கிராமங்களை சுத்தமாகவும் சுகாதார முறைகளில் வைத்துக் கொள்ளவும், தண்ணீர் வசதி, சாக்கடைகள், நீர்பாசன வசதிகள், போக்குவாத்து சாதனங்கள் இவைகளைக் குறித்து கிராமங்களில் திட்டம் வகுத்து விருத்தி செய்ய முக்கியமாக பயிற்சி யளிக்கப்படும். நோய் பரவாமல் தடுக்க மார்க்கங்களும், குடி தண்ணீரை அசுத்தப்படுத்தாமலிருக்க வழிகளும் கற்பிக்கப்படும். சிறிய பாலங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது, சிறிய பாலங்களை சீர்படுத்துவது, ஏரிகரைகள், வாய்க்கால்கள் மராமத்து, கிணறு வெட்டுவது, சாலைகள் இருபுறமும் மரம் வளர்த்தல், தோப்பு

கள், பார்க்குகள் அமைத்தல், இவைகளைப்பற்றி யெல்லாம் போதிக்கப் படும். இப்பயிற்சி நேர்முறையில் செய்யச் சொல்லி பயிற்சி யளிக்கப்படும்.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கும், பிரசிடெண்டுகளுக்கும் இவ்வித பயிற்சி யளிக்கப்படவேண்டிய அவசியத்தைப்பற்றி நாம் வெகு காலமாக இப்பத்திரிகையின் மூலம் வற்புறுத்தி வருகிறோம். நம் பத்திரிகை 6-வது மலரில் 9, 10 பக்கங்களில் இதே விஷயத்தைக் குறித்து நாம் எழுதி யிருப்பதை நம் வாசகர்களும் கவர்மெண்டும் கவனிக்கவும். தேச மெங்கும் கல்வியின்மையால் அறியாமை சூழ்ந்திருக்கிறது. பஞ்சாயத்து அங்கத்தினர்களும், பிரசிடெண்டுகளும் அநேகர் இந்த விதிக்கு விலக்கல்ல. அவர்களுக்கு பொது நன்மை காரியங்கள் செய்ய அறிவோ, அனு பவமோ கிடையாது. சட்டப்படி அவர்கள் கிராமங்களின் ஆரோக்யத் திற்கும் சுகாதாரத்திற்கும் பொறுப்பாளிகளாக இருப்பதுடன் சட்டத்தின் ஷெடியூல்களில் கண்ட ஜாப்தாக்களை பார்த்தோமானல் கவர்மெண்டார் இப்போது பயிற்சியளிக்க உத்தேசிக்கும் காரியங்கள் உள்பட இன்னும் அநேக வேலைகளை அவர்கள் நிர்பந்தத்தின் பேரிலும், இஷ்டப்பட்டாலும் செய்யும்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது எங்கு பார்த்தாலும் நிர்மாண வேலைகளைப்பற்றியே பேச்சாக இருக்கிறது. ஆனல் ஒவ்வொரு கிராமத்தின் அபிவிருத்தியும், முக்கியமாக ஆரோக்ய, சுகாதார விஷயமாக அபிவிருத்தியானது அந்தந்த பஞ்சாயத்துகள் சரிவர கவனித்தால்தான் இப்பேச்செல்லாம் பலன் தரும். பஞ்சாயத்துகள் நிலைத்துவிட்டன. சுயாட்சிக்கு அவைகள்தான் முதற்படிகள். கிராம வாழ்க்கையை சீர் படுத்த அதுதான் அடிப்படையான ஸ்தாபனமாக இருக்கவேண்டும். இந்த நிலைமையில் இப்பயிற்சியை எல்லா பஞ்சாயத்து பிரசிடெண்டுகளுக் கும் அங்கத்தினர்களுக்கும் கட்டாயத்தின்பேரில் அளிக்காமல் எதற்காக பஞ்சாயத்துகளில் வித்தியாசமும், பயிற்சி இஷ்டப்பட்டால் பெறலாம் என்றும் கவர்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. பிரசுரிக்கப்பட்டிருக்கும் திட்டத்திலிருந்து, பஞ்சாயத்து களிலிருக்கும் கிராம தலைமை அதிகாரிக்கு மட்டும், பஞ்சாயத்து பிரசி டெண்டு, அங்கத்தினர்கள் நீங்கலாக பயிற்சியளிக்கப்படுமா என்பது தெரியவில்லை. அப்படியானல் கிராம நன்மைக்கான வேலைகளை பஞ்சாயத் தும், அதன் பிரசிடெண்டும் கவனிக்குமா, அல்லது கிராம தலைமை அதி காரியா அல்லது இது விஷயமாக இரட்டை யாட்சியா என்ற பிரச்னை எழும்புகிறது. பஞ்சாயத்தில்லாத கிராமங்களின் அதிகாரிகளுக்குத்தான் பயிற்சி யென்றல், அப்போது பஞ்சாயத்து கிராமங்கள் அலக்ஷியம் செய் யப்படலாமா. உண்மையில் எந்த நிர்மாண திட்டமும் அமுலுக்கு வருமுன் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஆட்சி ஏற்பட்டு ஒவ்வொரு அங்கத் தினருக்கும் நன்ருக பயிற்சி யளிக்கப்பட்டிருக்கவேண்டும். இதற்கு ஏற்கனவே ஒரு உதாரணம் இருக்கிறது. கோவாபரேடிவ் சொஸைடி களுக்கு பஞ்சாயத்தார்களை பயிற்சி செய்யும் திட்டம் அமுலில் கொண்டு

வந்து வெற்றிகரமாக நடந்து வருகிறது என ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தியா கவர்மெண்டும் ஐந்து வருஷங்கள் [illegible] சகாயம் செய்தது.

368

சென்னை கவர்மெண்டார் இந்த திட்டத்தை பண முடை காரணத்திற்காக குறுக்கமாட்டார்கள் என நம்புகிறோம். அவர்கள் பட்ஜெட்டில் இவ்வருஷம் அதிக மிச்சம் இருக்கிறது. கிராம அபிவிருத்திக்காக செலவு செய்யும் பணம் வீண் போகாது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்து பயிற்சி யளிப்பது கவர்மெண்டாரின் முதல் பொறுப்பு. இந்தியா கவர்மெண்டு மெம்பர், சர் டலால், இத்திட்டங்களை யெல்லாம் திருப்திகரமாக நடத்திவைக்க தகுந்த தேற்சியடைந்த சிப்பந்திகள் தான் தேவை என்று கவர்னர்களின் ஆலோசனையாளர்களுக்கு வற்புறுத்தி சொல்லியிருக்கிறார். வருங்காலத்தில் சாதிக்கப்போகும் எல்லா திட்டங்களுக்கும் தூண்கள்போல் இந்த பஞ்சாயத்து பிரசிடெண்டுகளும், பஞ்சாயத்து அங்கத்தினர்களும் விளங்குவார்கள் என்று நாம் நிச்சயமாக கூறுவோம். ஆகவே இவர்களுக்கு பயிற்சி யளிப்பதுதான் முதல் கடமை. ஆகையால் இது விஷயமாக கவர்மெண்டார் மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கத்தை கலந்தாலோசித்து, எல்லா பஞ்சாயத்து மெம்பர்களுக்கும் தலைவர்களுக்கும் பயிற்சி யளிக்க ஒரு விசாலமான திட்டம் வகுத்து அமுல் நடத்துமாறு மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம். கடைசி பக்ஷமாகவாவது இத்திட்ட[illegible]கா ணத்தில் எல்லா பஞ்சாயத்து பிரசிடெண்டுகளுக்கும் [illegible]கும் அடையுமாறு செய்யவேண்டும்.

கவர்மெண்டு பொது சுகாதார இலாகா அறிக்கை.

அடுத்த நான்கு மாதங்களில் காலரா நோய் பரவக்[illegible]ங்களைப்பற்றி கவனிக்கவேண்டும். தற்சமயம் விசாகப்பட்டணம் ஜில்லாவில் பரவி இருக்கும் இந்த நோய் அடுத்த கிழக்கு மேற்கு கோதாவரி ஜில்லாக்களுக்கு பரவலாம். ஆனால் அது உக்ரமாக இருக்காது என்று கருதப்படுகிறது. மேலும் அது சீடட் ஜில்லாக்களிலும் இன்னும் அதிகரிக்கலாம். ஆனால் மிக கொடியதாக இராது.

மாகாணத்தின் இதர பிரதேசங்களில் இந்நோய் பரவாது என்று கருதப்படுகிறது. பனி மாதங்களில் காவேரி டெல்டா, தாம்பரபரணி பிரதேசங்களிலும், வழக்கம்போல் இந்நோய் அதிகரிக்கலாம்.

அந்தந்த ஸ்தலத்து சுகாதார இலாகா சிப்பந்திகள் இந்நோய் கண்டவுடன் தகுந்த மருந்துகள் இதர வஸ்துக்களை உபயோகித்து நோயை தடுக்கும்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

காலரா வந்திருக்கிறது எனத் தெரிந்தால் கீழ்க்கண்ட முன் எச்சரிக்கைகளை அனுசரிக்கவேண்டியது.

வசிக்குமிடம்

1. ஒவ்வொரு வீட்டையும் அதனுடைய சுற்றுப்புறங்களையும் அதிக சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லாக் கழிவாய்ப் பொருள்களும் அப்பால் எறியப்படவேண்டும்.

2. எல்லாக் கக்கூஸ்களையும் மூத்திரம் போகும் இடங்களையும் சாக்கடைகளையும், குட்டைகளையும் தினந்தோறும் தவறாமல் கழுவி சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். முடியுமானால் கிருமி நாசகாரியால் கழுவி விடப்படவேண்டும்.

மனிதன்

3. சரீரத்தையும் உடையையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். முக்கியமாய் கைகளை அதிக சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

4. எல்லா ஆகாரப் பொருள்களையும், குடிக்கும் தண்ணீர், மற்றப் பானங்களையும் ஈக்கள் வந்து மொய்க்காதிருக்கும்படி மூடிவைக்கவேண்டும்.

5. அவ்வப்போது சமைத்த ஆகாரத்தைச் சூடாகச் சாப்பிடவேண்டும். பழகின சாதத்தையும் ஜில்லென்றிருக்கும் சாதத்தையும் சாப்பிடக்கூடாது.

6. பச்சைக் காய்கறி வகைகளையும், கீரைகளையும் அதிகமாய் பழுத்த பழங்களையும் அல்லது நன்றாய்ப் பழுக்காத பழங்களையும், கடைத்தெருவில் விற்கும் மிட்டாய் தினுசுகளையும் அல்லது தெருவில் விற்கப்படும் தின்பண்டங்களையும் வாங்கிச் சாப்பிடுவதை அறவே நிறுத்திவிடவேண்டும்.

7. குடி தண்ணீர் கொதிக்கவைத்து மூடப்பட்டிருக்கவேண்டும்.

8. ஊரில் காலரா கண்டிருக்கும் சமயங்களில் சாதாரணமாக பேதிக்கு சாப்பிடக்கூடாது.

9. வயிற்றுப்போக்கு கண்டால் உடனே அதனைத் தகுந்த சிகிச்சை செய்து நிறுத்திவிடவேண்டும்.

10. கண்ட கண்ட வேளைகளில் சாப்பிடுவதையும், அதிக நேரம் இரவில் கண்விழித்தலையும், குளிரிலும் ஈரத்திலும் நடமாடுவதையும் இன்னும் சரீரத்திற்கு களைப்பைத் தரும் வேலைகளையும் நிறுத்திவிடவேண்டும்.

11. காலரா ஊரில் வரா முன்பே இனாகுலேஷன் செய்துகொள்ளவேண்டும்.

ஓர் வீட்டில் காலரா கண்டிருந்தால் அனுசரிக்கவேண்டிய முன்னெச்சரிக்கைகள்

12. அதிக வயிற்றுப்போக்கோ அல்லது காலராவோ கண்டால் உடனே சுகாதார இலாகா அதிகாரிகளிடம் தெரிவித்துவிடவேண்டும்.

13. முடியுமானால் சிகிச்சை அளிக்கக்கூடிய ஒதுக்கி வைக்கப்பட்ட ஆஸ்பத்திரிக்கு வியாதியஸ்தனை அப்புறப்படுத்தவேண்டியது. ஒதுக்கி வைக்கப்பட்ட ஆஸ்பத்திரிகள் இல்லாத இடங்களில் :—

(*a*) நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள வீட்டில் அதிகப்படியான துணிமணி, படுக்கை முதலியன இல்லாத ஓர் அறையில் தனியே வைத்து சிகிச்சை செய்யலாம்.

(b) வியாதியஸ்தனுடைய எல்லா வாந்தியையும் மலத்தையும் மாத்தூளோ அல்லது உமியோ போட்டு நிரப்பிய ஓர் சட்டியில் ஜாக்கிரதையாய் சேகரிக்க வேண்டும். அவைகளை மண்ணெண்ணெய் கலந்து எரிக்கவேண்டும். இவ்விதமின்றி தரையின்மேல் மலமும் வாந்தியும் ஆகிவிட்டால் அந்த இடங்களை வைக்கோல் போட்டு கொளுத்தவேண்டும் அல்லது அந்த இடங்களை கிருமி நாசகாரியாலோ அல்லது நீரின் சுண்ணாம்பாலோ சுத்தம் செய்யவேண்டும்.

(c) வியாதியஸ்தனால் தொடப்பெற்ற துணிமணிகளை அரைமணி நேரம், கிருமி நாசகாரியில் ஊரவைக்கப்பட்டபின் வெய்யிலில் உலர்த்தப்படவேண்டும். கந்தைகளையும் உபயோகமற்ற துணிகளையும் கொளுத்திவிடவேண்டும்.

(d) வியாதியஸ்தன் இருக்கும் அறையில் உண்ணவோ அல்லது குடிக்கவோ கூடாது. காலரா வியாதியஸ்தனை கவனித்தவர்களும் அல்லது அந்த வியாதியஸ்தனால் தொடப்பட்ட எந்த சாமான்களை தொட்டவர்களும் அவர்களுடைய கைகளை நன்றாய் கிருமி நாசகாரி மருந்தில் சுத்தமாய் கழுவிக்கொள்ளவேண்டும்.

(e) வியாதியஸ்தனுக்காக உபயோகிக்கும் தட்டுமுட்டுச் சாமான்களையும், கிண்ணங்களையும், தட்டுக்களையும் இன்னும் மற்ற சாமான்களையும் மறுபடியும் உபயோகிப்பதற்குமுன் ஐந்து நிமிஷமாவது கொதிக்கும் தண்ணீரில் ஊரவேண்டும்.

(f) காலரா கண்ட உடனே டாக்டரைக் கூப்பிட்டு சிகிச்சை செய்து கொள்ளவேண்டும்.

(g) வீடு முழுவதும் அதிலும் முக்கியமாக வியாதியஸ்தனின் அறையையும் நன்றாய் மருந்தினால் சுத்தமாய்க் கழுவவேண்டும்.

(h) வியாதியஸ்தன் ஒருவேளை இறந்துவிடுவானேயானால் அவன் வீட்டில் உள்ளவர்களை தகனக்கிரியையின் சாங்கியத்தில் சம்பந்தப்பட்ட விரதம் அனுஷ்டிக்கவோ அல்லது அதிக விருந்தினர்கள் கூடி விருந்துண்ணவோ முதலிய எதையும் அனுமதிக்கக்கூடாது.

காலராவை எப்படித் தடுப்பது

1. சுகாதார அதிகாரிகளுக்கு காலரா கண்ட உடனே தெரியப்படுத்து.

2. கொதிக்க வைத்த ஜலத்தையே பருகு. குடிதண்ணீர் எடுக்கும்படியான இடங்களில் மலம் கழிக்காதே. அவ்விடங்களில் வியாதியஸ்தனின் துணிகளைத் துவைக்காதே.

3. அவ்வப்போது சமைத்த உணவையே சாப்பிடு. ஈக்கள் மொய்க்காமல் அவைகளை மூடிவை.

4. முன்னதாக இனாகுலேஷன் செய்துகொள்.

திட்டம், நிர்மாண வேலை இவ[illegible] சாதிக்கப்போவதைப்பற்[illegible] சர் டலால் பிரசங்கம்.

தொழில் அபிவிருத்தியை குறித்து இதுவரையில் திருப்திகரமான [illegible] வகுக்கப்படவில்லை. சில மாதங்களுக்குமுன் தொழில் முதலாளிகளுக்கு அ[illegible] பட்ட இரண்டு வினா சீட்டுகளுக்கு எதிர்பார்த்தபடி பதில் கிடைக்காதது ஏமாற்றத்

தையளிக்கிறது. அவர்களை யெல்லாம் என்னுடன் ஒத்துழைத்து, கேட்ட தகவல்களுக்கு பதில் கொடுத்து சகாயம் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இதர இலாகாக்களில் அதிக முன்னேற்றம் ஆகியிருக்கிறது. சார்ஜண்டு யாதாஸ்து வெளியாகி கொஞ்சம் காலமாய்விட்டது. அதை மாகாண கவர்மெண்டார் பரிசீலனை செய்து வருகிறார்கள். போக்குவரத்து சாலைகளைக் குறித்தும் ஒரு யாதாஸ்து வெளியாகியிருக்கிறது. ரயில்களைக் குறித்து ஒன்றை மத்திய கவர்மெண்டார் பரிசீலனை செய்து வருகிறார்கள். டாக்டர் பர்ன்ஸ் என்பவர் விவசாய அபிவிருத்திக்கு ரசாயன முறைகளால் சகாயம் செய்வதின் அவசியத்தைப் பற்றிய யாதாஸ்தும், விவசாயம், கால்நடை அபிவிருத்தி இவைகளைக் குறித்து சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி சபையின் கமிடியார் வெளியிட்டிருக்கும் யாதாஸ்தும் அதிக கவனத்திற்கு வந்திருக்கின்றன.

முக்கியமான பிரச்னைகளான, விலைவாசிகள் நிர்ணயம், விவசாய கடன்கள், நில உபயோகம், மீன், பால் விருத்தி செய்வது—இவைகளைப்பற்றி யெல்லாம் ஆலோசனைகள் கூறுமாறு விவசாய திட்ட கமிடியானது அநேக சப் கமிடிகளை நியமித்திருக்கிறது. மீன் இலாகா, காடுகள், மின்சார விசை அபிவிருத்தி இவைகளைப்பற்றியும் யாதாஸ்துகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. கூடிய சீக்கிரம் ஒரு மத்திய டெக்னிகல் விசை போர்டும் ஸ்தாபிக்கப்படும். நீர்பாசன முறைகளில் அபிவிருத்தி செய்ய ஒரு மத்திய நீர்பாசன போர்டும் ஸ்தாபிக்க உத்தேசம். நிலங்கள் தத்துப்போவதை தடுக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்ய கவர்மெண்டு திட்டம் போட்டு வருகிறது. முக்கியமான இப்பிரச்னைகளில் ஆலோசனை கூற வெளிநாடுகளிலிருந்து மிக்க தேர்ச்சி பெற்ற நிபுணர்களை தருவிக்க வேண்டிவரும்.

என் இலாகாவில் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகள் மாகாண கவர்மெண்டின் பொறுப்பக்குள் அடங்கினவை. தேசம் முழுவதற்கும் என் இலாகா திட்டம் வகுக்கும்போது தற்சமயம் அமுலிலிருக்கும் ராஜாங்க முறையை அடிப்படையாக கொண்டதாகத்தான் இருக்கும். ஆனால் பின்காலத்தின் ஆட்சிமுறை எந்த வகையாக இருந்தாலும், தற்சமயம் ஆலோசிக்கப்பட்டுவரும் திட்டம் அப்போதும் உபயோகமாக இருக்கும்.

சில வரையறைகளுக்குட்பட்டு, தொழிற்சாலைகள் ஒரே இடத்தில் கூட்டமாக இருப்பதைவிட தேசத்தின் பல பாகங்களிலும் பரவி யிருப்பதையே கவர்மெண்டு விரும்புகிறது. மாகாணங்கள் எல்லாம் நிர்மாண கமிடிகள் ஸ்தாபித்து வேலை செய்துவரும்படி வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி பல மாகாணங்களில் அவைகள் ஏற்பட்டிருக்கின்றன, பம்பாய் மாகாணம் கவனிக்கத் தக்க ஒரு ஐந்து வருஷ திட்டத்தையும் வெளியிட்டிருக்கிறது.

தொழில் விருத்திக்கு ஒரு தனி கமிடி ஏற்படுத்தப்படும். மாகாணங்களும் அப்படி தனிக் கமிடிகள் ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அக்கமிடியின் சிபார்சுகள் மத்திய கவர்மெண்டால் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதிக்கப்படும்.

எந்த திட்டம் வகுக்கப்பட்டாலும் அதை அமுல் நடத்தி வேலை செய்ய தகுந்த சிப்பந்திகள் இருக்கவேண்டியது அத்யாவசியம் என்பது என் அபிப்பிராயம். ஏனெனில் திட்டம் அப்போதுதான் தடைபடாமல் வேலை செய்ய முடியும். ஆகவே பிற்காலத்தில் தேவையாக யிருக்கும் எல்லா துறைகளிலும் ஆட்களுக்கு இப்போதிருந்து பயிற்சி யளிப்பதே மிக முக்கியமான வேலை. நம் கல்வி ஸ்தாபனங்களை இந்நோக்கத்துடன் திருத்தி யமைத்து விசாலப்படுத்துவதுடன், ஆராய்ச்சி செய்ய உபகார சம்பளங்கள் கொடுத்து மாணவர்களுக்கு நம் தேசத்திலும் வெளிநாடுகளிலும் பயிற்சி யடையும்படி செய்யவேண்டும்.

யுத்த நெருக்கடி சமயத்திலும் இது விஷயமாக திருப்திகரமான வேலை செய்துவரப்படுவது இதிலிருந்து தெரியவரும்.

சர்க்கார் பழ வர்க்கப் பண்ணைகளின் நோக்கம்.

பழ உற்பத்தி சம்பந்தமான விஷயங்களைக் குறித்து ஏராளமான கேள்விகள் டிபார்ட்மெண்ட்டாரால் பெறப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில, ஜில்லா ஆபீசர்களால் உதவி செய்யக்கூடிய அந்தந்த பிரதேசத்தை மாத்திரமே குறித்தவைகளாகவிருக்கின்றன. உதாரணமாக, தகுதியான நிலங்களைப் பொறுக்குதல், வியாதிகள் பூச்சிகளின் உபத்திரவம் முதலிய பிரச்னைகளை அந்தப் பிரதேசத்திலிருக்கும் டிமான்ஸ்ட்ரேட்டரே நேரில் பார்வையிட்டு தகுந்த யோசனை சொல்லி உதவியளிக்கக்கூடும். அன்றியும் பழத்தோட்ட பழங்கள், ஜாதி பொறுக்குதல், இன்னும் கன்றுகள் தருவித்துக்கொடுத்தல், முதலிய சாஸ்திரீகக் குறிப்புகளோடு சம்பந்தப்பட்ட விஷயம் சர்க்காரால் மாகாணத்தில் வெவ்வேறு ஸ்தலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பற்பல பழவர்க்கப் பண்ணைகளிலிருந்து பெறக்கூடும். இந்த பண்ணைகள், அந்தந்த பிரதேசங்களில் வியாபாரத்திற்கு முக்கியமான பழ வகைகளைக்குறித்து சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்னைகள் ஆராய்ச்சி செய்வதற்காகவே உத்தேசிக்கப்பட்டவை. இவைகளில் நடத்தப்படும் வேலைகளின் போக்கை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தியும் சரியான இடத்திலிருந்து தகுந்த யோசனைகளைப் பெற உதவுவதற்காகவும் அவ்வொவ்வொரு பண்ணைகளைக் குறித்து கீழே சுருக்கமான விவரம் தரப்பட்டிருக்கிறது:—

(1) **பழவர்க்க ஆராய்ச்சிப்பண்ணை, கோடூர் போஸ்டு, கடப்பா ஜில்லா.**— இந்தப் பண்ணை ஒரு "அசிஸ்டெண்ட்" என்ற உத்தியோகஸ்தர் கீழ் இருக்கிறது. இது சமவெளியில், நாரத்தை, மா (இவ்விரண்டு) பழ வர்க்கங்களுக்கு முக்கியமான வட்டமத்தியிலிருக்கிறது. மா, சாத்துக்குடி, நாரத்தை (ஆரஞ்சு), எலுமிச்சை, இவையே முக்கியமான ஆராய்ச்சிக்குள்பட்டவைகள். சபோடா, திராக்ஷை, மாதுளை, கொய்யா, இன்னும் சாகுபடியிலிருக்கிற எல்லா பழவகை செடிகளையும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. பக்க ஒட்டு, வேர் ஒட்டு இன்னும் மாவுக்கு இரட்டித்தல், முதலியவையும் மொட்டுக்கட்டின சாத்துக்குடி, நாரத்தையை, பற்பல அடிமரங்களில் வளர்த்து, தற்காலிகமாக பழக்கத்திலிருந்து வரும் விதை மூலம் வளர்க்கப்பட்ட தோட்ட பயிர்களுடன் ஒப்பிட்டுக் காண்பிப்பது முதலிய வேலைகள், மா, நாரத்தை பயிரிடுவோர்களுக்கு மிகவும் தீவிரமான ஊக்கத்தை அளிக்கும். நடத்திவரும் இதர வேறு வேறு வேலைகளாவன:—ஜாதி சங்கரம் (Hybridization) வேருடன்கூடிய அடிமரங்களை பரீட்சித்தல், அடிமரத்தின் வயதை ஒட்டுக்கட்டுவதற்காக நிர்ணயித்தல், அகாலத்தில் பலனை அளிக்கவல்ல மரங்களைப் பொறுக்குதல்; மாவுற்பத்தியில் அடிக்கடி நேரிடுகிற பலனற்ற வருஷங்களை நிச்சயமாக நிவாரணம் செய்வதில் பலன் தரக்கூடிய வழிகளைக்கண்டுபிடித்தல், முதலியவைகள். நாரத்தை வர்க்கத்தில், எலுமிச்சைக்குத்தகுந்த அடிமரத்தை பொறுக்குதல், எலுமிச்சமரங்களை, சேர்மையான உருவத்தோடு வளரும்படி பழக்குதல், உயர்ந்த வாக்கத்தில் உற்பத்தியான சாத்துக்குடி, நாரத்தை, மரங்களைப்பொறுக்குதல், தகுந்த வயதும், ஜாதியுமான அடிமரங்களை நிர்ணயித்தல், முதலிய வேலைகள் நடந்துவருகின்றன. விவசாயிகள் பண்ணையைப்பார்வையிடவோ அல்லது கடித மூலமாக யோசனை பெறவோ எப்பொழுதும் முடியும்.

(2) **சர்க்கார் கனிவர்க்க ஆராய்ச்சிப்பண்ணை, கூனூர்.**—"அசிஸ்டெண்ட் என்ற உத்யோகஸ்தரின் கீழிருக்கும் இந்தப்பண்ணையும் மலைப்பிரதேசத்து பழ

வகைகளின் பேரில் (அபிவிருத்தி) வேலைக்காக ஏற்படுத்தப்பட்டது. (உதாரணமாக) ப்ளம்ஸ் (Plums) பேரிக்காய் (Pears), ஆப்பிள் (Apples), பீச்சஸ் (Peaches), அப்ரிகாட் (Apricot), ப்ரூன்ஸ் (Pruns), பர்ஸிம்மன்ஸ் (Persimmons), செரிமோயர் (Cher mover), மரத்தக்காளி (Tree Tomato), ஸ்ட்ராபெரி (Strawberry), கேப்கூஸ்பரி (Cape gooseberry), சுரினம் செர்ரி (Surinam cherry) பிஜோவா (Peijoa) ப்பாஷன்ப்ரூட் (Passion fruit), வால்நட் (Walnuts) முதலியன. கொஞ்சம் கிராக்ஷை, க்ரேப் ப்ரூட் (Grape fruit), முசுக்கட்டைச் செடி (Mulberry) அத்தியும் கூட பரீட்சையிலிருக்கின்றன. ஐரோப்பிய தேசத்துகாய்கறிகளிலும் முக்கியமான (ஆராய்ச்சி) வேலை நடக்கிறது. தண்டிலிருந்தே, சந்ததி உற்பத்தி செய்தலும் (Vegetable propagation), வேர்ஸ்டாக் என்ற (root stock) வழியாலும், இவையுடன் பழத்தின் மாசூல் அளவையும் குணத்தையும் உயர்த்துவதற்காக வேண்டிய சில தோட்ட வேலைகள் போன்ற பழக்கத்தினாலும் ப்ளம் (Plums), ஆப்பிள் (Apples), பேரிக்காய் (Pears), பீச் (Peach), ஆகிய பழவர்க்க அபிவிருத்தி முறைகள் நடந்துவருகின்றன. பொருளாதார துறையில் முக்கியமான பைரீத்ரம் (Pyrethrum), இல்லக்ஸ் (Ilex) என்ற இவ்விரண்டு செடிவகைகளும் இப்பண்ணையில் சாகுபடியாகின்றன. நீலகிரி மலையிலும், கொடைக்கானல் மலையிலும் சேர்வராய் மலையிலும் இருக்கிற பழ சாகுபடி செய்வோர்களுக்கு இப்பண்ணை நற்போதனைகளையும் அளிக்கும்.

(3) சர்க்கார் பழவர்க்கப்பண்ணை பர்லியார்.—இப்பண்ணையில் மிதமான உஷ்ணப் பிரதேசங்களுக்கு உகந்த எல்லாவிதமான பழவகைகளும் வாசனைத்திரவ்ய விருட்சங்களும் ஏராளமாக சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் கல்லார் என்ற ஊரிலிருக்கும் பண்ணை, கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள மேட்டுப்பாளையத்திலிருக்கும் "அஸிஸ்டெண்ட்" என்ற உத்யோகஸ்தரின் கீழ் இருக்கின்றன. மங்கூஸ்டின்ஸ் (Mangoostuns) டூரியன்ஸ் (Durians,) லிட்சி (Litchi), லெங்சட் (Lengset), பலா (Jack), கரம்போலா (Carambola) பிளிம்பி (Bilimbi), வாழை (Banana), பம்பிளிமாஸ் (Pomelo), நாரத்தை (ஆரஞ்சு), பப்பாளி (Papaya), கம்ரக் (Komrok), இவைகள் பழவகைகளுக்குள் முக்கியமானவை. கிராம்பு, ஜாதிக்காய், ஏலக்காய், இலவங்கபட்டை இவை போன்ற எல்லா வகை, வாசனை திரவ்ய விருட்சங்களும் உண்டு. நாநா விதமான பழ மரங்களும் வாசனை திரவ்யங்களும் பார்க்க வருகிறவர்களுக்கு மிகவும் உற்சாகமளிக்கும். இப்பழவகைகளில் அக்கறையுள்ள விவசாயிகளுக்கு, சில பழவகைச் செடிகளை (விதையின்றி) தண்டு மூல சந்ததி உற்பத்தியில் நடக்கும் சில ஆராய்ச்சிகளும் ருசிகரமாயிருக்கும்.

(4) சர்க்கார் பழவர்க்கப்பண்ணை, கல்லார்.—இப்பண்ணையில், மங்கூஸ்டின் என்றதும் தளர்ந்த தோல் ஆரஞ்சு இவ்விரண்டு பழவகைகளிலும் மிகவும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, மங்குஸ் தீனுக்கு பக்க ஒட்டும், மொட்டுகட்டுவதால் சந்ததி உற்பத்தி செய்தலுமான வழிகள் மிகுந்த நல்ல பயனை அளித்திருக்கிறபடியால், இப்பண்ணையைப்போய் பார்ப்பது வீண் பொழுதாகாது. இன்னும், க்ரேப்ப்ரூட்டுக்கும், லிட்சிக்கும் பற்பல ஜாதிகளை பரீட்சித்தல், தளர்ந்த தோல் ஆரஞ்சுக்கு அடிமர பரீட்சைகள், இவைகளும் மிகுந்த ருசிகரமான ஆராய்ச்சிகளாகும். கோகோ (Cocoa) பாக்கு உயர்ந்த (சணல்) கயிற்றுக்கு உபயோகப்படக்கூடிய நாரை யளிக்கக்கூடிய வாழை (Banana) இன்னும் சிலவகையான லெமன்ஸ் இனிப்பான (ஆரஞ்சு) அவகடோ (Avakado) சபோடா (Sapota), "ஸ்டார்" என்றும் "ரோஜா" என்றதுமான ஆப்பிள் (Apples) இவைகள் நன்றாய்ப்பயிராகி வருகின்றன. சமீபத்தில் ஆரஞ்சு மங்குஸ்தான் பழவகை நாற்று வளர்க்க நல்ல முறைப்படி நடக்கும் தோட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(5) காலேஜ பழத் தோட்டங்கள், லாலிரோடு போஸ்டு, கோயம்பத்தூர்.—இத்தோட்டங்களை நிர்வகிக்கும் "அஸிஸ்டெண்ட்" உத்தியோகஸ்தரின் ஆதிக்

கத்தில் ஒரு வாழைத்தோட்டமும், பூச்செடித் தோட்டமும் இருக்கின்றன. எல்லாவித காய்கறிகளை உற்பத்தி செய்வதும், படிப்பினைக்காக எல்லாவித தென் இந்தியா பழ வகைகள், புஷ்பங்கள், ரம்யமான தாவரங்கள் இவைகளை சேகரித்து வைப்பதுமே இவ்வட்டாரத்தின் முக்கிய நோக்கம். நல்ல பலன் தரக்கூடிய பப்பாளிகன்றுகளை பொறுக்குதல், நந்திரி, வெண்டை, கீரை இவைகளை அபி விருத்தி செய்தல், வாழையிலும், அபகா (Abaco) நாரிலும் ஆராய்ச்சி செய்தல் இவைகள் (முக்கியமான) ஆராய்ச்சி துறையில் அலுவல்கள். காய்கறிவிதை சேக ரித்து அனுப்புதல், ரம்யமான தாவரங்களையும், உபயோகமுள்ள புஷ்ப செடிகளை யும், மரம் வளர்ப்பதற்கு உபயோகப்படக்கூடிய கன்றுகளையும் அனுப்பித்தல் இவைபோன்றவைகளும் மற்றொரு முக்கியமான அலுவல். கோயம்புத்தூரிலிருக் கும் வாழை, கிளுகளின் சேமிப்பு மிகவும் விஸ்தாரமானதும் நூறு ஜாதிகள் அடங்கியதும் ஆகும். இவைகளின் கன்றுகள் கேட்டவர்களுக்கு அனுப்பிக்கப் படும். இவ்விடத்தில் "பாப்பைன்" (Papain) ஒரு சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதர பழவர்க்க ஸ்தலங்கள் (வடமலபார்) தலிப்பெரம்பா விவசாய ஆராய்ச்சி பண்ணையிலும் (குண்டூர்) யாம் பண்ணையிலும் (விசாகப்பட்டணம் ஜில்லா) அநகா பள்ளி பண்ணையிலும், பழவர்க்க உபஆராய்ச்சி ஸ்தலங்கள், ஒரு "அஸிஸ் டெண்ட்" அல்லது "பீல்ட்மென்" என்ற உத்யோகஸ்தரின் பார்வையிலிருக் கின்றன. தலப்பெரம்பாவில், மா, அனுஸ், வாழை இப்படி கிளுகளின் கன்று களை விற்பனைக்காக உற்பத்தி செய்ய உற்பத்திசாலை ஒன்று நடத்தப்படுகிறது. அநகாபள்ளியில், கொய்யாவிலும், சபோடாவிலும் தான் முக்கியமான வேலைகள் நடத்தப்படுகின்றன. குண்டூரிலோ, அப்பிரதேசத்திற்குத்தகுதியான பழவகைகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

பழங்களை சேமித்துவைத்தலும், பழவகையிலுண்டாகும் பொருள்களும் கோடுரில் பல்லாண்டுகளாக, பழங்களைச் சேமித்து வைத்தலைப்பற்றியும் பழவகை களிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய வஸ்துக்களை குறித்தும் ஆராய்ச்சி வேலை நடைபெற்றுவருகிறது. எலுமிச்சை நாரத்தையிலிருந்தும் மிகவும் சேர்த்தியான பழரஸபானங்களும், பற்பலவித மான வாழை கிளுகளிலிருந்து தயார் செய்யப் பட்ட மாவும் தின்பண்டமும், சேமிக்கப்பட்ட அனுஸ் பழமும் கொய்யாவும் இன் னும் சில பழவகையிலிருந்து தயாரிக்கப்பட்ட இனிய பழக்கட்டி கற்கண்டுகளும் பஞ்சாமிருதங்களும் தயாருகின்றன. சமீப காலத்தில், மேற் சொன்னவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு பிரத்யேகமான திட்டம் உத்திரவாகியிருக்கிறபடியால் பார்க்கவருகிறவர்களுக்கு, அத்திட்டங்களை நேரில் பார்ப்பதற்கும், நன்றாக தெரிந்து கொள்வதற்கும் ஒரு நல்ல தருணம் ஏற்பட்டிருக்கிறது.

விவசாயிகள் அனைவரும், பழவகை பயிரிடுதலைக்குறித்த எல்லா விஷயங்களை யும் பழவகை நிபுணர் (ப்ரூட்ஸ் ஸ்பெஷலிஸ்ட்), கோடூர் போஸ்ட், கடப்பை ஜில்லா, என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

ஆராய்ச்சியின் அவசியம்.

விவசாய இலாகா டைரக்டர், டாக்டர் பி. வி. காத் சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில், வருங்காலத்தில் எல்லா துறைகளிலும் அதிக உற்பத்தி செய்ய விவசாயப் பொருள்கள் உபயோகிக்கப்பட்டதன் மூலம் விசைதான் உபயோகப்படுத்தவேண்டியிருக்குமென்றும், அது விஷயமாய்தான் சமீபத்தில் கடலை எண்ணெயால் ஓட்டப்பட்ட ஒரு யந்திரத்தை ஓட்டி பரிசோதனை செய்து பார்க்க நேர்ந்ததாகவும், அதைப்பற்றி இன்னும் அதிகம் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருப்பதாகவும், அப்படி செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்.

* *

இந்திய சர்காரின் துணி விநியோக திட்டம்

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஜனத்தொகைக்கேற்றவாறு ஒரு குறித்த அளவு கொடுக்கப்படும். சென்னை, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பீஹார், வங்காளம், ஒரிசா, இவைகளுக்கு தலைக்கு 10 கஜமும், சிந்து, ராஜபுதனம், மத்திய இந்திய சமஸ்தானங்கள், இவைகளுக்கு 12 கஜமும், பம்பாய், பஞ்சாப், வடமேற்கு மாகாணங்களுக்கு தலைக்கு 18 கஜமும் அளிக்கப்படும்.

* * *

கோதாவரியில் அணைகட்டு.

கோதாவரி டெல்டாவில் ஏறக்குறைய 20 லக்ஷம் ஏகராக்களுக்கு நீர்பாசன வசதிகள் ஏற்படும்படி ஒரு அணைகட்டு கட்டுவதைக் குறித்து ஒரு பிரத்தியேக உத்தியோகஸ்தரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கோதாவரியின் மேல் பாகங்களில், காடுகளும், ஏஜென்சி பிரதேசங்களுமான இடத்தில் அணை கட்டுவது சாத்தியமா என்பதைப்பற்றியும், அதன் மூலம் விவசாயத்திற்கு உதவும்படியாகவும், கூடுமானால் மின்சார உற்பத்தியும் செய்ய யோசிக்கப்படுகிறது. தற்சமயம் பிரவாகத்தின் 5 சத விகிதமே விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ராமய்யபேட்டையிலும், மற்றொரு ஸ்தலத்திலும் இதற்கு தகுதியான ஸ்தலம் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இது விஷயமாக மேல் கல்விக்காக இங்கிலாந்திற்குச் சென்ற டாக்டர் K. L. ராவ் என்பவர் அமெரிக்காவில் டெனசி பள்ளத்தாக்கில் இருக்கும் அணை கட்டை பார்வையிட்டு அம்முறைகளை கற்கும்படி கேட்கப்பட்டிருக்கிறார்.

இது முடிந்தபின் இத்திட்டத்தின் பொருளாதார, விவசாய அம்சங்கள் சர்க்காரால் பரிசீலிக்கப்படும்.

இத்திட்டம் தற்சமயம் பரிசீலனை செய்யப்படும் நிலைமையில்தான் இருக்கிறதென்றும், இது முடிவடைய இன்னும் வெகுகாலம் செல்லும் என்று சர்க்காரின் அறிக்கை கூறுகிறது.

பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ்
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

இப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு:

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

செக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. விப்பன்ன, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.
மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	1,60,00,000.
மூலப்பண்டு	—	16,00,000.

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.